பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 223

செவ்வாய்க்கிழமை
08 ஜுலை 2025

ஆனி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

கடற்படைக் குழுவால்
**சுண்டிக்குளத்தில்**
**காணி**
**அளவீடு!**
விரிவு
பக்கம்:- 03


# புதிய புதைகுழியில் குவியலாகச் சிதிலங்கள்

## அடையாளப்படுத்துவதில் சிக்கல்

**யாழ்ப்பாணம், ஜுலை 8**

**செம்மணி மனிதப்புதைகுழியில், துறைசார் பேராசிரியர் ராஜ்சோமதேவா தனது நிபுணத்துவத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்திய இடத்தில் குவியலாகச் சிதிலங்கள் அவதானிக் கப்பட்டுள்ளன.**

11





## செம்மணிப் புதைகுழியில் புதிதாக ஐந்து சிதிலங்கள்

### இதுவரை 52 சிதிலங்கள்

யாழ்ப்பாணம், ஜுலை 8
யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின் போது, மேலும் ஐந்து என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

11

### செம்மணிப் புதைகுழிக்கு அருகாக வெட்டப்பட்ட கால்வாயில் இருந்து

## மூன்று இடங்களில் என்புச் சிதிலங்கள்

யாழ்ப்பாணம், ஜுலை 8
யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழிக்கு அருகாக, தற்காலிகமாகக் கால்வாய் அமைக்கும் பணிகளை முன்னெடுத்த போது, அதற்குள் மூன்று இடங்களில் என்புச் சிதிலங்கள் அவதானிக் கப்பட்டுள்ளன.

11

## குற்றப் பிரதேசமாகவே செம்மணியைக் கருதுக

### சட்டத்தரணி ரட்ணவேல் கருத்து

யாழ்ப்பாணம், ஜுலை 8
செம்மணிப் புதைகுழியில் அவதானிக்கப்பட்ட - மீட்கப்பட்ட சிதிலங்கள் நிலமட்டத்திலிருந்து ஒன்றரை அடி தொடக்கம் இரண்டு அடி ஆழத்திலேயே புதைக் கப்பட்டுள்ளன.
புதைகுழிக்குள் பல அசாதாரண சூழ்நிலைகள் காணப்படுகின்றன.
எனவே, முகத்தோற்றத் தின் அளவில் குற்றப்பிரதேச

11

**முன்னாள் போராளி அரவிந்தனுக்கு பிணை**
விரிவு பக்:- 11

## மொழியுரிமையை ஏற்காமை வரலாற்றில் பெரும் தவறே!

### படிப்பினைகளை கற்காவிடின் வரலாறு மீளவரும் நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 8
எமது நாட்டில் மொழியுரிமைக்கு மதிப்பளிக்க முடியாமற்போனமை வரலாற்றுத் தவறே. இது சிறிய விடயமல்ல. இந்தத் தவறை நாங்கள் விளங்கிக்கொள்ளாவிடில், கசப்பான வரலாறு மீளத்திரும்பும் -இவ்வாறு நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.
அரச கரும மொழிகள் வாரத்தின் இறுதிநாள் நிகழ்வு, இலங்கை மன்றக் கல்லூரியில்

11





புரச்சந்தி புரளி

## எதற்காக மறைக்கப்படுகிறது இந்தியாவுடனான ஒப்பந்தம்?

### விமல் வீரவன்ஸ கேள்வி



கொழும்பு, ஜுலை 8
இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட, 'பாதுகாப்பு ஒத்துழைப்பு' ஒப்பந்தம் உட்பட பல பிரதானமான ஒப்பந்தங்கள் எதற்காக மறைத்து வைக்கப்பட்டுள்ளன? என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

11

**'முந்தி கால்வைச்ச இடமெல்லாம் கண்ணிவெடி, இப்ப கால்வாய் வெட்டிற இடம் கூட புதைகுழி'**

## தேசியப் பாதுகாப்பு மோசம்

### காரியவசம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுலை 8
நாட்டின் தேசியப் பாதுகாப்பு விடுதலைப் புலிகளின் காலத்தை விடவும் மோசமான நிலைக்குச் சென்றுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரி

11

## ஆனையிறவில் விபத்து இருவருக்குப் படுகாயம்

கிளிநொச்சி, ஜுலை 8
ஆனையிறவு இயக்கச்சி பகுதியில், டிப்பரும் ஹைஎஸ் வாகனமும் மோதி விபத்துக்கு உள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.
யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச்

11

## வவுனியா மாவட்டத்தின் வெடிவைத்தகல் பகுதியில் 1,000 ஏக்கர் ஆக்கிரமிப்பு!

### ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு



வவுனியா, ஜுலை 8
வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெடிவைத்தகல் கிராம அலுவலர் பிரிவில், மகாவலி (எல்) திட்டத்தினூடாக சுமார் 1,000 ஏக்கர் வரையான தமிழ் மக்களின் காணிகள் பெரும்பான்மை மக்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றன என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 07.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4125 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 08 35 64 72 |
| விசேட எழுத்து | M |

| ஹந்தஹரண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 07.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1192 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 02 33 36 44 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 07.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0151 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 1 2 8 9 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 07.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2231 |
| ஆங்கில எழுத்து | I |
| சுப்பர் இலக்கம் | 22 |
| வெற்றி இலக்கங்கள் | 09 13 42 73 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 07.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5883 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 0 7 1 1 4 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 07.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1913 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 03 34 50 70 |
| விசேட எழுத்து | V |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 07.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0458 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 1 1 4 5 |

# அதானி திட்ட ஆரம்பச் செலவுகளை கையளிக்கும் கட்டாயத்தில் இலங்கை!

**கொழும்பு, ஜூலை 8**

**இலங்கையில் அதானி குழுமத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளநிலையில் அந்த நிறுவனத்தின் ஆரம்பச் செலவுகளை திருப்பிச் செலுத்தவேண்டிய அழுத்தத்தில் இலங்கை அரசாங்கம் உள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இந்தியாவின் அதானி கிரீன்எனர்ஜி நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை இரத்து செய்த இலங்கை அரசு, நிறுவனம் முன்பு செய்த முதலீடுகளுக்கான பணத்தை (பல மில்லியன் அமெரிக்க டொலர்) திருப்பிச் செலுத்தும் அழுத்தத்தில் உள்ளது.

அதானி நிறுவனம் வடமாகாணத்தின் மன்னார் மற்றும் பூநகரிப் பகுதிகளில் 442 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் காற்றாலை மின்சாரத் திட்டத்தை அமைக்க முன்வந்திருந்தது. இந்தத் திட்டம் 2025ஆம் ஆண்டில் தேசிய மின்சாரக் கட்டமைப்பில் குறைந்தது 350 மெகாவோட் மின்சாரத்தைச் சேர்க்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் இந்தியாவின் அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் இரண்டு திட்டமிடப்பட்ட காற்றாலை மின்சாரத் திட்டங்களில் இருந்து விலகிக்கொள்வதாக இலங்கை அரசாங்கத்துக்கு தற்போது அறிவித்துள்ளது.

முன்னைய அரசாங்கம் அதானி நிறுவனத்துடன் உடன்பட்டிருந்த விலையை ஏற்கமறுத்த தேசிய மக்கள் சக்தி தலைமையிலான புதிய அரசாங்கம், உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் விலையைக் குறைக்கக்கோரிய பின்னர் நிறுவனம் இந்த முடிவை எடுத்துள்ளது.

அதானி நிறுவனம் கடந்த மே மாதம் இலங்கையின் நிலையான எரிசக்தி ஆணையத்துடன் இணைந்து மேற்கொண்ட ஆராய்ச்சி மற்றும் முன்னெடுப்புச் செலவுகளுக்கான திருப்பிச்செலுத்துதலுக்கான கோரிக்கைக் கடிதத்தை அனுப்பியுள்ளது.

ஆயினும் இலங்கையின் நிலையான எரிசக்தி ஆணையகத்துக்குச் செலுத்தப்பட்ட 3 மில்லியன் டொலர் உள்ளடங்கிய அனைத்துச் செலவுகளுக்குமான துல்லியமான தொகையை அந்த நிறுவனம் இன்னமும் வெளிப்படுத்தவில்லை.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு இந்தத் திருப்பிச் செலுத்துதல் தொடர்பாக இன்னும் முடிவு எடுக்கவில்லை.

இதன் தற்போதைய நிலை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஒரு மூத்த அதிகாரி, "இது தொடர்பாக சட்ட ஆலோசனைப் பெறப்படும்.

ஏதேனும் பணம் செலுத்தவேண்டியதாயின், அது அமைச்சரவை ஒப்புதலின் பின்னர் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும்" என்று தெரிவித்தார் என அந்த ஆங்கில ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | 07.07.2025 | |
| தினம் | திங்கட்கிழமை | |
| வெற்றி வாரம் | 0591 | |
| ஆங்கில எழுத்து | Z | |
| வெற்றி இலக்கம் | 9 8 3 5 4 8 | |

| Super Ball | |
|---|---|
| திகதி | 07.07.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2857 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 21 64 72 80 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 07.07.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 15 43 58 61 |
| வெற்றி வாரம் | 5018 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 07.07.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ராசி | ரிஷபம் |
| வெற்றி இலக்கம் | 14 15 16 21 |
| சீட்டிழுப்பு வாரம் | 4569 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 07.07.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | G |
| சுப்பர் இலக்கம் | 09 |
| வெற்றி இலக்கம் | 09 10 12 56 |
| வெற்றி வாரம் | 2033 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 07.07.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கம் | 41 68 72 76 |
| வெற்றி வாரம் | 2683 |

| JAYODA | |
|---|---|
| திகதி | 07.07.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 17 21 36 61 |
| வெற்றி வாரம் | 2141 |

## துமிந்த திசாநாயக்கவின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 8

முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க உட்பட மூவரின் விளக்கமறியல் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. கல்கிசை நீதவான் நீதிமன்றம் நேற்று விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டது.

சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள துமிந்த திசாநாயக்க உள்ளிட்ட மூவரும் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள சொகுசுத் தொடர்மாடி குடியிருப்பு ஒன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த காரில் இருந்த பெண்ணிடம் இருந்து தங்கமுலாம் பூசப்பட்ட ரி 56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க கொழும்பு பம்பலப்பிட்டிப் பிரதேசத்தில் வைத்து கடந்த மாதம் 23 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த துமிந்த திசாநாயக்க, சுகவீனம் காரணமாக கடந்த மாதம் 25ஆம் திகதி சிறைச்சாலை மருத்துவனையில் சேர்க்கப்பட்ட பின்னர் மே மாதம் 28ஆம் திகதி மீண்டும் மகசீன் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-இ)



எல்.ஓ.எல்.சி. பினான்ஸ் நிறுவனத்தின் புதிய கிளை நேற்றுக் காலை அச்சுவேலியில் விமரிசையாகத் திறக்கப்பட்டது. (எ-26)

## அமெரிக்க வரிப்பிரச்சினையை இலகுவாகத் தீர்த்திருப்பார் ரணில்.

### முன்னாள் எம்.பி. ரத்னப்பிரிய கூறுகிறார்

அமெரிக்க வரிவிலக்குப் பட்டியலில் இலங்கை இருப்பதாகத் தெரியவில்லை. ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருந்திருந்தால் இந்தப் பிரச்சினைக்கு இலகுவாகத் தீர்வு கண்டிருப்பார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எங்களுக்குக் கிடைக்கின்ற தகவல்களின் பிரகாரம் ஜனாதிபதி ட்ரம்பின் வரி நிவாரணப் பட்டியலில் இலங்கை இல்லை. அவ்வாறானால் அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது? வரி நிவாரணம் கிடைக்காவிட்டால், எமது ஆடைத் தொழிற்சாலைகள் வீழ்ச்சியடையும். அங்கு தொழில்புரிபவர்களின் தொழிலுக்குப் பாதிப்பு ஏற்படும் ஆபத்து இருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருந்திருந்தால், எந்தவழியிலேனும் ஜனாதிபதி ட்ரம்பைச் சந்தித்து, கலந்துரையாடி இந்த வரி நிவாரணத்துக்கு தீர்வைவைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பார்-என்றார். (எ-இ)

## சமாதானத்தின் மூலமாக தமிழீழத்தை அடைய முயற்சி

### தசநாயக்க கண்டுபிடிப்பு

தமிழீழக் கனவு இன்னும் கைவிடப்படவில்லை. போர்மூலம் அடையமுடியாத இலக்கை சமாதானம்மூலம் அடைவதற்குரிய முயற்சி தொடர்கின்றது என்று முன்னாள் கடற்படை பேச்சாளரும், மாணவர்கள் கடத்தல் சம்பவத்தில் குற்றஞ் சாட்டப்பட்டவருமான டி.கே.பி. தசநாயக்க தெரிவித்துள்ளார். ஒற்றையாட்சி மற்றும் இராணுவத்தினரைப் பாதுகாக்கும் அமைப்பில் இவரும் அங்கம் வகிக்கின்றார். அவ்வமைப்பினர் மகாநாயக்க தேரரைச் சந்தித்தவேளையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

30 வருடகால போரில் இருந்து இராணுவத்தினரே உயிர்த் தியாகங்களுக்கு மத்தியில் நாட்டை மீட்டெடுத்தனர். இவ்வாறு மீட்கப்பட்ட நாட்டை பாதுகாத்துக்கொள்வதற்கு அரசியல் தலைமைத்துவம் முன்வரவேண்டும். ஆனால் புலிகளுக்கு போரின்போது முடியாமல்போனதை சமாதானம் மூலம் பெற்றுக்கொள்வதற்கு சர்வதேச அமைப்பு ஊடாக முயற்சி எடுக்கப்படுகின்றது. அதாவது ஈழக் கனவு கைவிடப்படவில்லை. அதனால்தான் இலங்கையில் அநீதி இழைக்கப்படுவதாக விம்பம் உருவாக்கப்படுகின்றது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் சுயாதீன வழக்கறிஞர் அலுவலகம் என்பன ஸ்தாபிக்கப்பட்டுவிட்டால் அது படையினரின் தியாகத்தைக் காட்டிக்கொடுப்பதாகவே அமையும்-என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாவலி அதிகாரசபையை நீக்கினால் காணி பறிபோகும்

## மகாநாயக்க தேரர்களிடம் முறைப்பாடு

**கொழும்பு, ஜுலை 8**

**வடக்கு, கிழக்கிலுள்ள காணிகளில் 40 சதவீதமானவை மகாவலி அதிகாரசபை வசம் உள்ளநிலையில், அந்த அதிகாரசபையை நீக்குவதற்கு மகாநாயக்க தேரர்கள் இடமளிக்கக் கூடாது என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஒற்றையாட்சி மற்றும் படையினரை பாதுகாப்பதற்கான அமைப்பின் பிரதிநிதிகள் மகாநாயக்க தேரர்களை நேற்றுமுன்தினம் சந்தித்தனர். அப்போது அந்த அமைப்பின் சார்பில் மெதகொட அபய திஸ்ஸ தேரர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முற்பட்டபோது, அதைச் செய்யவேண்டமென மகாநாயக்க தேரர்கள் அறிவுரை வழங்கினார்கள். பின்னர் ரணில் அதைச் செய்யவில்லை. மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் மாகாண சபை முறைமையிலுள்ள ஒத்திசைவுப் பட்டியலை நீக்குவதற்குரியயோசனை முன்வைக்கப்பட்டது. அதில் கைவைக்க வேண்டாமென மகாநாயக்க தேரர்கள் சங்க அறிவுரை வழங்கினார்கள். இதற்கமைய மஹிந்த செயற்பட்டார். தற்போது மகாவலி அதிகார சபையை இரத்து செய்வதற்குரிய முயற்சி இடம்பெற்று வருகின்றது. எமது நாட்டில் வடக்கு, கிழக்கிலுள்ள இடங்களில் 40 சதவீதமானவை மகாவலி அதிகாரசபை வசமே உள்ளது. மகாவலி அதிகாரசபை கைவிடப்பட்டால் அதிகாரம் பிரதேச செயலாளர் வசம் செல்லும். அதன்பிறகு இனவாத அடிப்படையில் காணி பகிர்ந்தளிக்கப்படலாம். அது பாரதூரமான நிலைமைக்கு இடமளிக்கும். இனவாதம் மற்றும் பிரிவினை வாதத்துக்கு இடமளிக்ககூடிய இப்படிப் பல விடயங்கள் இடம்பெறுகின்றன. இதன் பின்னணியில் வேறு நிகழ்ச்சிநிரல் இருக்கலாம். எனவே, இப்படியான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் என மகாநாயக்க தேரர்கள் அரசுக்கு ஆலோசனை வழங்கவேண்டும்-என்றார். (எ-44)

# நல்லிணக்க ஆணைக்குழு சட்டவரைவால் ஆபத்தாம்

## அபயதிஸ்ஸ தேரர் போர்க்கொடி

கொழும்பு, ஜுலை 8

உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, சுயாதீன வழக்கறிஞர் அலுவலகம் என்பவற்றை நிறுவுவதற்குரிய சட்டவரைவுகளை எந்தக் காரணத்துக்காகவும் நிறைவேற்றுவதற்கு இடமளிக்கக்கூடாது என்று மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இராணுவத்துக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு, இனப்படுகொலைக் குற்றச்சாட்டு என்பன முன்வைக்கப்பட்டுள்ளன. தண்டனை வழங்கல் தொடர்பில் இதுவரை ஏழு சட்டவரைவுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே மேற்படி இரு சட்டவரைவுகள் இயற்றப்படவுள்ளன. போரில் இருந்து நாட்டைக் காத்த இராணுவத்தினரின் பாதுகாப்பு, ஒற்றையாட்சி தொடர்பில் மகாநாயக்க தேரர்கள் அரசாங்கத்துக்கு, அனுசாசனம் வழங்கமுடியும். அது தொடர்பில் கோரிக்கை விடுக்கவே மகாநாயக்க தேரர்களைச் சந்தித்தோம். இராணுவத்துக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டுகளை முன்வைத்து, அவர்களுக்குக் களங்கம் ஏற்படுத்தும் நடவடிக்கை இறுதிக்கட்டத்துக்கு வந்துள்ளது. இதனை நாம் தடுத்து நிறுத்தவேண்டும்-என்றார். (எ-44)

# ஊழல் ஒழிப்புச் சட்டம் முன்னேற்றகரமானது

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

தற்போது நடைமுறையில் உள்ள ஊழல் ஒழிப்புச்சட்டம் முன்னேற்றகரமான சட்டமாகும். சர்வதேச சட்டத்தில் உள்ள விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமுமான ரங்க திசாநாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அமைச்சரவையானது மோசடி நோக்குடன் தீர்மானம் எடுத்து இருக்குமானால் அது சட்டவிரோதமானது. முன்னாள் அமைச்சர் ஒருவருக்கு எதிராக வழக்கு ஒன்றுள்ளது. மற்றொருவருக்கு எதிராக உர மோசடி தொடர்பிலும் வழக்கு உள்ளது.

இவை அனைத்துக்கும் அமைச்சரவைப் பத்திரம் உள்ளது.

தனிப்பட்டவகையில் இவை அனைத்தையும் செய்யவில்லை என்பதற்கு அமைய இந்தக் குற்றங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன-என்றார். (எ-இ)

# சுண்டிக்குளம் பிரதேசத்தில் இரகசியமாக காணி அளவீடு

யாழ்ப்பாணம், ஜுலை 8

வடமராட்சி கிழக்கு, சுண்டிக்குளம் ஜே/435 பிரிவில் மக்களின் காணிகள் இரகசியமான முறையில் கடற்படையினரால் அளவீடு செய்யப்பட்டுள்ளன என்று வடமாகாண காணிக் கானமக்கள் உரிமை இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அந்த இயக்கத்தின் தலைவர் இ.முரளிதரன் இது தொடர்பாகத் தெரிவித்துள்ளதாவது

ஜே/435 கிராம சேவகர் பிரிவில் உள்ள மக்களின் மீன்பிடி நிலங்கள், மக்களுக்குரிய காணிகள் திருகோணமலையில் இருந்து வந்த கடற்படையின் ஒரு குழுவால் மிக இரகசியமாக அளவீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாகக் கேட்டபோது, உங்களின் காணிகள் என்றால் காணி அனுமதிப் பத்திரத்தைக் காட்டுங்கள் என்று அவர்கள் பதிலளித்தனர் என்று பொதுமக்கள் கூறுகின்றனர். அந்தப் பகுதி கிராம அலுவலருக்கோ, வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலருக்கோ தெரியப்படுத்தப்படாமல் அளவீடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. மீனவ சங்கம், பிரதேச செயலர், கிராம அலுவலர், காணிக் கிளையினர் ஆகிய தரப்புகளுக்குத் தெரியப்படுத்தாமல் மிக இரகசியமாக காணிகள் அளவிடப்பட்டுள்ளன. காலப்போக்கில் இந்தப் பகுதியில் கடற்றொழில் செய்கின்ற மக்கள் கடற்றொழில் செய்யமுடியாத நிலைமை உருவாகும் என்ற அச்சம் எழுந்துள்ளது- என்றார். (எ-27)




## தாழ் திறக்காதோ?

மூந்தநாள் ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் அஞ்சரை மணி போல ஒருத்தர் யாழ்ப்பாணம் லைப்ரறிக்குப் போயிருக்கிறார். அவருக்கு அவசரமா அங்க சில புத்தகங்களையும், பழைய பேப்பர்களையும் வாசிச்சு சில தகவல்களை எடுக்கவேண்டியிருந்திருக்குது. அவர் லைப்ரறிக்குள்ள போய், ஒருமாதிரி தனக்குத் தேவையான பேப்பர் கட்டுகளில சிலதைக் கண்டுபிடிச்சு மேசையில கொண்டந்து வாசிக்க வெளிக்கிட்டிருக்கிறார். அப்ப ஒரு உத்தியோகத்தர் வந்து ‘அண்ணை ஆறுமணியாகுது.லைப்ரறியைப் பூட்டுற நேரம். இன்னொருநாள் வந்து உதுகளை வாசியுங்கோ’ எண்டு சொல்லியிருக்கிறார். வாசிக்கப் போனவரும் கனகாலமா லைப்ரறிப்பக்கம் போகேலை. ஆனால் கொரோனாவுக்கு முதல் அடிக்கடி போறவர். அப்ப பொழுதுபட ஏழுமணிமட்டும் லைப்ரறியில ஆற அமர இருந்து வாசிக்கலாம். ‘தம்பி, நான் முந்தி வரேக்க ஏழுமணி மட்டும் வாசிக்கிறனான். இப்ப ரூல்ஸ் மாத்திட்டினமோ?’ எண்டு அந்த உத்தியோகத்தரிட்ட கேட்டிருக்கிறார். கொரோனா வந்ததோட பின்னேரம் ஆறுமணியோட பூட்டுறனாங்கள் ‘எண்டு பதில் வந்திருக்குது. ‘ இப்பதான் கொரோனா இல்லையே. அப்ப ஏன் பழையமாதிரி ஏழுமணிமட்டும் திறக்கக்கூடாது?- எண்டு இவரும் அப்பாவித்தனமாத் திருப்பிக் கேட்டிருக்கிறார். அதுக்கு அந்த உத்தியோகத்தருக்கு என்ன பதில் சொல்லுறதெண்டு தெரியாமல் தலையைச் சொறிஞ்சிருக்கிறார். வாசிக்கப் போனவரும் பேசாமல் வெளிக்கிட்டிட்டுட்டார்.

நேற்றுத் திங்கட்கிழமை வெள்ளனவே ஆள் திரும்பவும் லைப்ரறிக்குப் போயிருக்கிறார். முதல்நாள் நேரஞ் செல்லப் போனதாலதானே வாசிச்சு, தகவல் எடுக்க ஏலாமல் போனது. அதால நேற்றைக்கு அவர் விடியவே வெளிக்கிட்டு, லைப்ரறிக்குப் போனால் வாசலில நிண்டவர் ‘இண்டைக்குத் திங்கட்கிழமை லைப்ரறி பூட்டு’ எண்டு மறிச்சிருக்கிறார். இவருக்கு ஒண்டும் விளங்கேலை ‘ஏன் ? ஏதும் லீவோ?’ எண்டு கேக்க, ‘சனி, ஞாயிறு திறக்கிறதால திங்கட்கிழமை லைப்ரறியில வேலை செய்யிறவை எல்லாருக்கும் லீவு. அதாலதான் திங்கட்கிழமையில பூட்டுறவை’ எண்டு அவர் விளக்கம் குடுத்திருக்கிறார்.‘நான் நேற்றும் வந்தனான். நேரம் போட்டுது எண்டு ஆறுமணியோட கலைச்சுப்போட்டினம். ஆனால் நேற்றைக்கும் எல்லா உத்தியோகத்தர்மாரும் வந்ததாத் தெரியேலையே. கொஞ்சப்பேர்தான் நிண்டவை’ எண்டு வாசகர் சொல்லியிருக்கிறார். அதுக்கு அவர் ‘சனி, ஞாயிறில எல்லாரும் வாறேலைத்தான். ரொட்டேசனிலதான் வருவினம்.’ எண்டிருக்கிறார். வாசிக்கப் போனவரும் விடுறதாயில்லை. ‘அப்பிடி ரொட்டேசனில வாறவைக்கு எதுக்குத் திங்கட்கிழமை லீவு? திங்கட்கிழமையும் ரொட்டேசனில வந்து திறக்கலாமே? வாசிக்கிற தேவை எல்லாருக்கும், எப்பவும் இருக்கு. கொரோனாவைச் சாட்டி பின்னேரத்தில ஆறுமணியோட பூட்டுகினம். பிறகு சனி, ஞாயிறு ரொட்டேசனில வந்திட்டுத் திங்கட்கிழமை முழுநாளும் பூட்டுகினம். இதெல்லாம் என்ன நடைமுறையோ தெரியேலை’ எண்டு பேப்பர் வாசிக்கப்போனவர், புறுபுறுத்தபடி திரும்பிப் போட்டார்.

‘உந்தக் கோதாரி விழுந்த போன் வந்த பிறகு வாசிப்புப் பழக்கம் துண்டற இல்லாமல் போட்டுது’ எண்டு எல்லாரும் புலம்பிக்கொண்டிருக்கினம். ஆனால் அதையும் தாண்டி வாசிக்க நினைக்கிறவைக்கும் ஆயிரத்தெட்டுத் தடையள் போட்டால் என்னெண்டு வாசிப்புப் பழக்கம் கூடும்? என்னெண்டு புதிசா ஆக்கள் வாசிக்க வருவினம்? வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டவேண்டிய லைப்ரறியே இப்பிடி ஒருநாள், அதுவும் கிழமையில முதல்நாள் முழுசாப் பூட்டிறதும், பின்னேரத்தில ஆறுமணிமட்டும்தான் வாசிக்கலாம் எண்டு நேரத்தை ஒருமணித்தியாலம் குறைக்கிறதும் சரியில்லை கண்டியளோ. மேயர் ஒருக்கா இந்த விசயத்தில கவனமெடுப்பாவோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள்வழியில் வீண்செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. மாலையில் வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**இடபம்:** காலையில் சற்று சோர்வாக இருக்கும். பிற்பகலுக்குமேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தாயின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். திடீர்ச்செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். முக்கியமான முடிவுகளை ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**சிம்மம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமேஈடுபடவும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாய்வழி உறவுகளுக்காக செலவுசெய்யவேண்டிவரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மாலையில் வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக அமையும்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றி கரமாகமுடியும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மகரம்:** இன்று எதிலும் சற்றுப் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும்.

**கும்பம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் பணிச்சுமை குறையும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச்செலவுகளும் ஏற்படும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்துகொடுப்பீர்கள். மாலையில் உறவினர் அல்லது நண்பர் வீட்டுக்குச் செல்லும் வாய்ப்பும் அதனால் மனதில் உற்சாகமும் ஏற்படும்.

# இந்திய மீனவர்கள் அத்துமீறலை தடுக்கும் நிரந்தரத்தீர்வே தேவை

## அன்னராசா வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஜூலை 8**
**இந்திய மீனவர் அத்துமீறல் பிரச்சினைக்கு வாய்ப்பேச்சுகளைவிடவும் நிரந்தரத் தீர்வே காணப்படவேண்டும் என்பதே வடக்கு மக்களின் எதிர்பார்ப்பு என்று வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளரும் ஊர்காவற்றுறைப் பிரதேசசபைத் தவிசாளருமான அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்திய மீனவர்களின் வருகையைக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதை நாம் வரவேற்கும் அதேநேரம், இவ்வாறான நடவடிக்கைகள் தற்காலிகத் தீர்வாகவே இருக்கும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

இந்தப் பிரச்சினைக்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தலையிட்டு இருநாட்டு வெளிவிவகார அமைச்சர் மட்டத்திலும் கடற்றொழில் அமைச்சு மட்டத்திலும் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதே சாலச் சிறந்த அணுகுமுறையாக இருக்கும். இந்த விடயத்தில் தற்காலிகத் தீர்வைவிட நிரந்தரத் தீர்வைக் காண ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம். வடக்கு மாகாணத்தில் சட்டவிரோதக் கடற்றொழில் நடவடிக்கைகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது அதிகரித்துள்ளன. எங்களுடைய கடலையும், எங்களுடைய சூழலையும் பாதுகாக்கும் வகையில் சட்டத்தின் துணையுடன் சட்டவிரோதத் தொழில்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். கடற்றொழில் அமைச்சர் ஜனாதிபதி ஆகியோர் அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்-என்றார். (ஏ-100)

# வேள்விப் பொங்கல்

யாழ்., ஜூலை 8

அல்வாய் வடக்கு வட்டிகவளை அருள்மிகு விறுமாண்டி கோயில் (வெலுப்பாதி) வருடாந்த வேள்விப் பொங்கல் விழா மடப்பண்டம் எடுத்தல், வளந்து கட்டுதல் என்பவற்றுடன் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் விசேட பூசைகள் நடைபெற்று மதியம் 2மணியளவில் நிறைவுபெற வுள்ளது. வேள்விப் பொங்கலை முன்னிட்டு நேர்த்திக்காக விடப்படும் ஆட்டுக்கடா ஒன்றுக்கு சென்ற வருடத்தைப் போல் இவ்வாண்டும் இரண்டாயிரம் ரூபா பெற்றுக்கொள்ளப்படும் எனவும் ஆலய நேர்த்திக்காக விடப்படும் ஆட்டுக்கடாவும் கோழிகளும் ஆலய உள்வளாகத்துக்குள் கட்டப்படும் எனவும் பூசைகள் யாவும் குறித்த நேரத்தில் நிறைவுபெற பக்தர்கள் நேர்த்திக்கடன்களை 11 மணிக்கு முன்னர் நிறைவேற்றி பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் ஆலய தர்மகர்த்தா சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 31 . 12 . 1964 |  | 07 . 07 . 2025 |

## திருமதி. பத்மாஜினி ஜெகதீஸ்வரன்

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. பத்மாஜினி ஜெகதீஸ்வரன் அவர்கள் நேற்று (07.07.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ஜெகதீஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விஜயராசா - கமலாதேவியின் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பரிமளம் மற்றும் வேலாயுதம் தம்பதியரின் அன்பு மருமகளும், விமலாஜினி, காலஞ்சென்ற கமலாஜினி மற்றும் றங்கஜினி, நீலாஜினி (ஆசிரியை யா/ இராமநாதன் கல்லூரி), விஜயசேகரன், விஜயபாலன் (லண்டன்), காலஞ்சென்ற விஜயகுமார் ஆகியோரின் சகோதரியும், குமரேஸ்வரி (ஆசிரயை யா/ இணுவில் இந்துக் கல்லூரி), சியாமினி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும்,நிதர்சன் (பிரான்ஸ்), நிரூசன் ஆகியோரின் சிறியதாயும், ஜெனோஸ் (லண்டன்), மதுஸ் (லண்டன்), சங்கவி ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2025) செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வினாத்தியடி வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்
077 170 3502
077 104 2451

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும், எப்போதுமே மண்டியிடுவது இல்லை.


-அப்துல் கலாம்-

# உண்மையைத் தின்னும் டிஜிட்டல்பேய்கள்

செம்மணி மனிதப்புதைகுழி மீண்டும் அகழ்வாய்வு செய்யப்படும் நிலையில், நேற்றுத் திங்கட்கிழமை வரையில் 52 மனித எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதைவிட இன்னும் பல புதிய மனிதப்புதைகுழிகள் அந்தப் பகுதியில் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது., நிலமெல்லாம் புதைகுழியாக செம்மணி மாறியிருக்கும் நிலையில், அங்கு புதையுண்டு போனவர்களுக்கான நீதி கோரும்குரல்கள் உலகெங்கும் எழத் தொடங் கியிருக்கின்றன.அந்த நீதிக்குரல்கள் கலப்படமற்றவையாக இருக்கவேண்டும். அப்போதுதான் அந்தக் குரல்களின் உண்மையின் வெம்மை உலகின் மனச்சாட்சியை சுட்டெரிக்கும். ஆனால் இப்போது செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட செம்மணி எலும்புக் கூடுகள் பற்றிய புகைப்படங்களை உண்மையென நம்பி, அதனையே தமது போராட்டங்களுக்கு பலரும் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக செம்மணிப் புதைகுழிக்கு நீஇதிகோரும் வகையில் சீமானின் நாம் தமிழர் கட்சி தமிழகத்தில் நடத்திய போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், இவ்வாறு செம்மணி மனிதப் புதைகுழி பற்றி செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்ட புகைப்படங்களையே பதாகைகளில் பயன்படுத்தி இருந்தனர். இதுவொரு பாரதூரமான முன்னுதாரணமாக மாறியிருக்கிறது.

உண்மைக்கு நேரெதிரானவையும்,அவரவர் எண்ணப் போக்குகளுக்கு ஏற்பவும் வடிவமைக்கப்படும் செயற்கை நுண்ணறிவுப் புகைப்படங்கள் செம்மணிப் புதைகுழி பற்றிய உண்மைகளை தவறான திசையில் வழிநடத்தக் கூடியவை: இவை உண்மையின் மீதான நம்பகத்தன்மையை கேள்விக்குட்படுத்துகின்றன. செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்படும் புகைப்படங்களையும், உண்மையான புகைப்படங்களையும் சாதாரணமக்களால் பிரித்தறிய முடியாத போது, அவர்கள் செயற்கை நுண்ணறிவுப் படங்களையும் உண்மையென நம்பி, அதனைப் பரப்பவும் செய்கின்றனர். ஒருகட்டத்தில் அவ்வாறு பரப்பப்படும் புகைப்படங்கள் செயற்கை நுண்ணறிவின் துணையோடு பொய்யாக உருவாக்கப்பட்டவை என்பது நிரூபிக்கப்பட்டால், ஒட்டுமொத்தமாக செம்மணி பற்றிய அத்தனை உண்மைகளும் கேள்விக்குட்படுத்தப்படும் நிலை உருவாகும். செம்மணிப் படங்கள் பொய்தானா? என்ற சந்தேகம் கிளர்ந்தால், உண்மையான ஆதாரங்களும் சந்தேகத்துக்கு உள்ளாகும். போர்க்குற்றவாளிகள் தப்புவதற்கும் இவை வழிவகுக்கும்: இந்தப் படங்களைப் போல செம்மணிப்புதைகுழிகளும் அங்கு மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளும் வலிந்து சோடிக்கப்பட்டவை' என்றுகூட அவர்கள் விதண்டாவாதம் புரிவதற்கான சந்தர்ப்பங்களையும் இந்த செயற்கை நுண்ணறிவுப் புகைப்படங்கள் ஏற்படுத்துவதோடு, வரலாற்றைக் கற்பனையால் சிதைக்கின்றன.

செம்மணிப் புதைகுழி பற்றிய ஆதாரங்கள் சரியான வகையில் காக்கப்பட வேண்டும். எந்தப் புகைப்படத்தையும்பயன்படுத்துமுன், சர்வதேச நிபுணர்களால் சரிபார்க்கப்படல் அவசியம். சமூக ஊடகங்களில் செம்மணி தொடர்பான போலி உள்ளடக்கங்களையும், செயற்கை நுண்ணறிவுப் புகைப்படங்களையும் தடுக்கும் அல்கோரிதங்களைப் பயன்படுத்தி, அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். உண்மையை உள்ளபடி காக்க, இவ்வாறானசில பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கைக்கொள்வதே இப்போதிருக்கும் வழி. செம்மணியின் எலும்புகளுக்குள்ளும் ஒளிந்திருக்கும் மௌன ஓலங்கள் உலகின் மனச்சாட்சியைத் தொடவேண்டும். செயற்கை நுண்ணறிவெனும் 'டிஜிட்டல் பேய்கள்' இந்த மௌன ஓலங்களைச் சிதைக்காமல் பார்த்துக் கொள்ள நாம் கடமைப்பட்டுள் ளோம். நீதிக்கான பாதை , ஆதாரங்களின் தூய்மையிலேயே தொடங்குகிறது; அதைக் கலப்படமாக்கும் எந்தச் செயலையும் தீவிரமாகத் தடுக்க வேண்டும். புல்வெளியில் படிந்த பனித்துளிகள் போன்று, உண்மையின் துளிகள் ஒருநாள் நீதியின் சூரியனாக ஒளிரும். அப்போது செம்மணிக்கும் நீதிகிடைக்கும்.




## தேர்தல் முறைமைக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை

### தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 8

**ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் இடம்பெற்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொள்வதற்கு எதிர்காலத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தேர்தல் முறைமைத் திருத்தம் செய்யப்படவேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்துகிறோம் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

நாட்டு மக்களின் அடிப்படை வாக்குரிமையைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு உண்டு. தேர்தலை உரிய காலத்தில் நடத்துவதற்கு அரசமைப்பால் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக செயற்படுகிறோம். ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் என்று மூன்று தேர்தல்களை சிறந்த முறையில் நடத்திமுடித்தோம். இந்தத் தேர்தல்களில் ஒருசில குறைபாடுகளை அவதானித்துள்ளோம். எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல்களின்போது அந்தக் குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் முறைமையைத் திருத்தம் செய்யவேண்டும் என்று நாடாளுமன்ற தெரிவுக்குழுக்கள் மற்றும் அமைச்சரவை உப குழுக்களிடம் வலியுறுத்தி பல யோசனைகளை முன்வைத்துள்ளோம். நடைமுறைக்குச் சாத்தியமானவகையில் தேர்தல் முறைமையில் திருத்தம் செய்யப்படவேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளோம். தேர்தல் முறைமையில் நாட்டுமக்கள் அதீத கவனம் செலுத்தவேண்டும். அப்போதுதான் சிறந்த பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய முடியும்-என்றார். (எ-இ)

## திறைசேரி உண்டியல்கள் ஏலவிற்பனை


கொழும்பு, ஜூலை 8

72 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், இன்று ஏல விற்பனையி னூடாக விநியோகிக்கப் படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. 91நாள்கள் முதிர்வுக் காலத்தைக்கொண்ட, 17 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக்கொண்ட, 20 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாள்கள் முதிர்வுக் காலத்தைக்கொண்ட, 35 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையினூடாக விநியோகிக்கப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (எ-இ)

## டிரானுக்கு மிரட்டல்

கொழும்பு, ஜூலை 8

பாதாள உலகக் கும்பல் தலைவர் ஒருவரிடமிருந்து கடந்த 5 ஆம் திகதி தொலைபேசிமூலம் கொலை மிரட்டல்கள் வந்துள்ளன என்று முன்னாள் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பதில் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக டிரான் அலஸ் இருந்தபோது, நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற பாதாள உலகத் தலைவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய நபர்களை, மீண்டும் நாட்டுக்குக் கொண்டுவர உத்தரவுகளைப் பிறப்பித்தார் என்று கூறி இந்தக் கொலை மிரட்டல் விடுக்கப்பட் டுள்ளது என்று கூறப்படுகின்றது. (எ-இ)



## பிரட்மன் வீரக்கோன் காலமானார்

கொழும்பு, ஜூலை 8

இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பில் ஒரு முக்கியமான நபராக அறியப்பட்ட பிரட்மன் வீரக்கோன் தனது 94ஆவது வயதில் காலமானார்.

இவர் இலங்கையின் ஆட்சியிலிருந்த 9 ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்களின் செயலாளராக நீண்டகாலம் பணியாற்றியுள்ளதுடன், இலங்கையின் அரசியல் மற்றும் நிர்வாகத்தில் பல குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளார். (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவுக்கு வழங்கிய ஆணையை கொள்ளையடிக்கும் ரில்வின், பிமல்

## சாடுகின்றார் சம்பிக்க ரணவக்க



கொழும்பு, ஜூலை 8

கோத்தாபய ராஜபக்சவுக்கு மக்கள் வழங்கிய ஆணையை பஸில் ராஜபக்ச கொள்ளையடித்ததைப்போன்று, அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மக்கள் வழங்கிய ஆணையை ரில்வின் சில்வா, பிமல் ரத்நாயக்க ஆகியோர் கொள்ளையடித்துள்ளனர் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசியல் கட்டமைப்பின்மீது நாட்டு மக்கள் கொண்டிருந்த வெறுப்பை சாதகமாகப் பயன்படுத்தி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மக்கள் வழங்கிய ஆணையை மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் கொள்ளையடித்துள்ளனர். இதன் பலனை அரசாங்கம் வெகுவிரைவில் விளங்கிக்கொள்ளும். தேசிய மற்றும் சர்வதேச அரசமுறை கடன்களைச் செலுத்துவதற்கு அரசாங்கத்திடம் எவ்விதமான புதிய திட்டங்களும் கிடையாது. சர்வதேச நாணயநிதியத்திலிருந்து கடன் பெற்று நாள்களைக் கடத்துவதை மாத்திரம் அரசாங்கம் பிரதான பொருளாதாரக் கொள்கையாகக் கொண்டுள்ளது -என்றார். (ஏ-இ)

# புதிய மாற்றங்களை நோக்கி பயணிக்கும் சுகாதாரசேவை

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

சுகாதார சேவை புதிய மாற்றங்களை நோக்கிப் பயணிக்கும் காலத்தில் நாம் இருக்கின்றோம். உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு, டிஜிற்றல் மயமாக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை, மரபணு மருத்துவவியல் மற்றும் நாடுகளுக்கு இடையேயான மருத்துவசேவை வழங்குதலை நோக்கிப் பயணிக்கும் போது ஒழுங்குபடுத்தல் அதனுடன் முன்னேறவேண்டும்.

இவ்வாறு சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற இலங்கை மருத்துவசபையின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பழைய உறுதிப்பாடுகள் புதிய சிக்கலான விடயங்களுக்கு வழிவகுக்கின்றன. மருத்துவத் தொழிலை ஒழுங்குபடுத்துவதில் மட்டுமல்லாமல் இலங்கையில் சுகாதார சேவைகளை வழங்குவதன் நோக்குநிலையை வடிவமைப்பதிலும் இலங்கை மருத்துவசபையை ஒரு முக்கியமான பங்காளி எனச் சுகாதார அமைச்சு கருதுகிறது.

பல வருடங்களாக உரிமம் வழங்குதல், கல்வித் தர நிலைகள், தொழில்முறை மேம்பாடு பராமரித்தல், நெறிமுறை மேற்பார்வை மற்றும் சுகாதாரப் பணியாளர் திட்டமிடல் போன்ற விடயங்களில் நாம் ஒன்றாகப் பணியாற்றியுள்ளோம். இவை சிறிய பணிகள் அல்ல- நமது குடிமக்களுக்கு வழங்கப்படும் சுகாதார சேவையின் தரம், பாதுகாப்பு மற்றும் பொறுப்புக்கூறல் எவ்வாறு உறுதிப்படுத்தப்படுகிறது என்பதை இந்த விடயங்களே தீர்மானிக்கின்றன-என்றார். (ஏ-இ)

# விசாரணைகள் இன்றி விடுவித்த கொள்கலன்கள் யாருடையவை?

## வெளிப்படுத்தக் கோருகின்றது முன்னிலை சோசலிசக் கட்சி



கொழும்பு, ஜூலை 8

சுங்கத்தில் இருந்து கொள்கலன்கள் பரிசோதனையின்றி விடுவிக்கப்படும் நடவடிக்கை நீண்டகாலமாக இடம்பெற்றுவருவதாகவே விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. அதனால் அந்த வியாபாரிகளின் நிறுவனங்களின் பெயர்ப் பட்டியலை நாட்டுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்று அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்போம் என முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சுங்கத்தில் இருந்து பரிசோதனை இல்லாமல் கடந்த ஜனவரி மாதம் 19,20,21 ஆகிய தினங்களில் கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ள ஜனாபதிபதியினால் ஜனவரி 30ஆம் திகதி குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கை தற்போது சமூகமயமாக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் பிரகாரம் சுங்கத்தில் ஏற்பட்டிருந்த நெரிசல் நிலைக்குத் தீர்வுகாண 3பேர் கொண்ட குழுவொன்று சுங்கப் பணிப்பாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவில் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்குக் குறைந்தபட்சம் 2 பேர் இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், 309 கொள்கலன்களையும் விடுவிப்பதற்கு ஒரு உறுப்பினர் மாத்திரம் இருந்து தனித்துத் தீர்மானம் எடுத்துள்ளார்.

அதில் 31 கொள்கலன்கள் ஸ்கான் பரிசோதனைகூட இன்றியே விடுவிக்கப்பட்டுள்ளன. 114 கொள்கலன்கள் ஸ்கான் செய்யப்பட்டுள்ளபோதும் பௌதிகப் பரிசோதனை செய்யப்படவில்லை. நீண்டகாலமாக இந்த மோசடிச் செயலை மேற்கொண்டுவரும் வியாபாரிகள் விடுதலையாகின்றனர். இந்த வியாபாரிகளை மறைத்துப் பாதுகாப்பதற்கு அரசாங்கமும் எதிர்க்கட்சியும் உத்தியோகபூர்வமற்ற இணக்கப்பாட்டுடன் செயற்பட்டுவருகின்றன என்றே தெரிகிறது. அதனால் வியாபாரிகளின் நிறுவனங்களின் பெயர்ப்பட்டியலை நாட்டுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்று அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்போம்-என்றார். (ஏ-இ)

# பாதாளக்குழுத் தலைவர்கள் மிக விரைவில் கைதாவர்

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளுக்கும், அரசியல் தரப்பினருக்கும் இடையே தொடர்புகளுண்டு. பாதாள உலகக் குழுக்களின் தலைவர்கள் விரைவில் கைதுசெய்யப்படுவார்கள் என்று ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பாதாளக் குழுக்களுக்கு இடையிலான போதைப்பொருள் வியாபாரத்தின் விளைவாகவே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகிறன. அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் எதிர்க்கட்சியினருக்கும் பாதாளக் குழுக்களுக்கும் இடையில் தொடர்புண்டு. கடந்த காலங்களில் அரசியல் அனுசரணையுடன் பாதாளக் குழுக்கள் எழுச்சி பெற்றன.

பாதாளக் குழுக்களின் முக்கியமான தலைவர்கள் வெகுவிரைவில் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று எதிர்க்கட்சியினர் அரசியல் விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் கிடையாது. பாதாளக் குழுக்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ஏ-இ)

# இந்தியாவுடனான ஒப்பந்தத்தால் ஏனைய நாடுகளுக்கு அதிருப்தி

## சொல்கிறார் சரத் வீரசேகர



கொழும்பு, ஜூலை 8

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள பாதுகாப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு புலனாய்வுத் தகவல்களை வழங்குவதைத் தவிர்க்கின்றன. தனிமனித பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. இவ்வாறு முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தேசிய பாதுகாப்புத் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களுக்கு வகுப்பறையில் அமரவைத்து கற்பிப்போம் என்று குறிப்பிட்ட அரசாங்கத்துக்கு தேசிய பாதுகாப்பு தொடர்பில் நிற்கவைத்து கற்பிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும் அரசாங்கம் குறிப்பாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. தேசிய பாதுகாப்பு தொடர்பில் அனுபவமுள்ளவர்களை பாதுகாப்புத் தொடர்பான விடயதானங்களுக்கு ஜனாதிபதி நியமித்திருக்கவேண்டும். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் சகல அயல் நாடுகளுடனும் இணக்கமாக செயற்படவேண்டும். இந்தியாவுக்கு மாத்திரம் சார்பாக செயற்பட்டுக்கொண்டு ஏனைய நாடுகளை பகைத்துக்கொள்ளக்கூடாது. இந்த அரசாங்கம் இந்தியாவை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்படுகிறது-என்றார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# First Capital இன் WhatsApp ஊடாக நம்பிக்கை அலகு மற்றும் அரசாங்க பிணைமுறிகள் மும்மொழி செயற்றிட்டத்தினூடாக முதலீட்டில் புரட்சியை ஏற்படுத்த நடவடிக்கை

தொழிற்றுறைகளை மாற்றியமைப்பதில் டிஜிட்டல் நிலைமாற்றம் என்பது அத்தியாவசியமானதாக அமைந்திருக்கும் யுகத்தில், JXG குழுமத்தின் (Janashakthi Group) துணைநிறுவனமான First Capital Holdings PLC, இலங்கையின் முதலாவது பரிவர்த்தனை முதலீட்டு வங்கியியல் தீர்வான, நம்பிக்கை அலகு மற்றும் அரசாங்க பிணையங்கள் மும்மொழி செயற்றிட்டத்தை அறிமுகம் செய்து, புத்தாக்கத்தில் முன்னிலையில் திகழ்வதை மேலும் உறுதி செய்துள்ளது. WhatsApp ஊடாக நம்பிக்கை அலகு நிதிகளை முதலீடு மற்றும் மீளப்பெறும் பரிவர்த்தனையையும் மற்றும் அரசு திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளுக்கு ஏல கோரிக்கையை அனுமதிக்கும் முதலாவது பரிவர்த்தனை கட்டமைப்பாக இது அமைந்துள்ளது. முதலீடுகளை இலகுவாக்குதல், அதிகளவு சௌகரியமாக்குதல் மற்றும் பாவனையாளருக்கு நட்பானதாக அமைந்திருக்கச் செய்தல் ஆகியவற்றுக்கான First Capital இன் அர்ப்பணிப்புக்கான எடுத்துக்காட்டாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது. First Capital Holdings PLC இன் பிரதம தொழினுட்ப மற்றும் டிஜிட்டல் அதிகாரி (CTDO) திரு. மித்தில அபேசேகர, இந்தத் திட்டத்தின் முன்னோடியாக செயலாற்றியிருந்தார். நவீன தொழினுட்பத் தீர்வுகளை, நிதிச் சேவைகளில் ஒன்றிணைப்பதில் அவரின் தொலைநோக்கு மற்றும் நிபுணத்துவம் ஆகியன முக்கிய பங்காற்றியிருந்தன. நம்பிக்கை அலகு மற்றும் அரசாங்க பிணையங்கள் மும்மொழித் திட்டம், முதலீட்டாளர்களில் அதன் தாக்கம் மற்றும் First Capital Holdings PLC எவ்வாறு டிஜிட்டல் முதலீடுகளின் எதிர்காலத்தை மீளமைக்கிறது என்பது தொடர்பில் தமது கருத்துகளை பகிர்ந்திருந்தார்.

**1. இலங்கையில் டிஜிட்டல் நிதிசார் பரிவர்த்தனைகளின் எதிர்காலத்தை First Capital Holdings PLCஇன் WhatsApp முதலீட்டுச் சேவைகள் எவ்வாறு மீளமைக்கின்றன?**

First Capital Holdings PLC இன் WhatsApp முதலீட்டுச் சேவையினூடாக, இலங்கையர்கள் நிதிச் சேவைகளுடன் ஈடுபாட்டை பேணுவதில் முன்னேற்றகரமான மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் ஏற்கனவே பரிட்சயமான, பயன்படுத்த இலகுவான கட்டமைப்பினைப் பயன்படுத்தி நம்பிக்கை அலகு நிதிகளை முதலீடு செய்வது மற்றும் பணத்தை மீளப் பெறுவதற்கான வாய்ப்பு மற்றும் அரச பிணையங்களுக்கு ஏல கோரிக்கையையும் எளிமைப்படுத்தி வழங்கியுள்ளது. பரிவர்த்தனைகளை எளிமைப்படுத்தி, முதலீட்டில் பாரம்பரியமாகக் காணப்படும் தடைகளை First Capital Holdings PLC நீக்கியுள்ளது. மும்மொழி களிலும் ஆதரவளிக்கும் வசதியுடன், அணுகல் திறன், உள்ளடக்கம் மற்றும் பயன்படுத்த இலகுத்தன்மை போன்றவற்றை இந்தச் சேவை பெருமளவு மேம்படுத்தி, பிராந்தியத்தில் டிஜிட்டல் நிதிசார் ஈடுபாட்டில் புதிய மட்டக்குறியை நிர்ணயித்துள்ளது.

**2. WhatsApp இல் நம்பிக்கை அலகு பரிவர்த்தனைகளை ஒன்றிணைக்கையில் First Capital Holdings PLC எதிர்கொண்டிருந்த சவால்கள் எவை, மற்றும் அவற்றை எவ்வாறு கடந்திருந்தீர்கள்?**

WhatsApp இல் நம்பிக்கை அலகு பரிவர்த்தனைகளை ஒன்றிணைக்கையில் சவால்களுக்கு குறை இருக்கவில்லை. வாடிக்கையாளர் பின்பற்றல் மற்றும் தொழினுட்ப நிறைவேற்றல் போன்றவற்றில் இதை விசேடமாக அவதானிக்கமுடிந்தது. புதிய சேவைகள் தொடர்பில் பாவனையாளர்களுக்கு விளக்கங்களை வழங்கல் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது போன்றன பிரதான தடைகளாக அமைந்திருந்ததுடன், அவற்றை நாம் கடக்க வேண்டியிருந்தது. OTP அடிப்படையிலான உறுதிப்படுத்தல்கள் மற்றும் துரித வாடிக்கையாளர் தொடர்பாடல் மூலோபாயம் போன்றன அடங்கலாக, உறுதியான பாதுகாப்பு ஒழுங்குமுறைகளினூடாக இவை சீர்செய்யப்பட்டிருந்தன. தொழினுட்ப அம்சங்களில், நிதிப் பரிவர்த்தனைகளுக்கு ஒப்பற்ற பின்புல ஒன்றிணைப்பை உறுதிசெய்வது முக்கியமானதாக அமைந்திருந்தது. வடிவமைப்பு, தகவல் தொழினுட்பம் மற்றும் செயற்பாடுகள் அணிகளுக்கிடையில் கைகோரப்பு மற்றும் இணைந்த செயற்பாடுகளை உறுதிசெய்ய வேண்டியிருந்தது. விறுவிறுப்பான விருத்தி, ஆழமான பரிசோதனைகள் மற்றும் பாவனையாளர் அனுபவங்களில் தெளிவான கவனம் செலுத்தல் போன்றவற்றினூடாக இந்தச் சவால்கள் அனைத்தையும் வெற்றிகரமாக கடக்க முடிந்தது.

**3. இலங்கையின் நிதிச் சேவைகள் துறையின் டிஜிட்டல் மாற்றியமைப்புப் போக்கில் இந்தச் சேவை எவ்வாறு பொருத்தமானதாக அமைந்திருக்கும்?**

இலங்கையின் நிதிச்சேவைகள் கட்டமைப்பு சௌகரியம், டிஜிட்டல் மயமாக்கம் மற்றும் பரந்த நிதிசார் உள்ளடக்கம் ஆகியவற்றை நோக்கிப் பயணிக்கும் நிலையில், இந்தத் திட்டமும் அதற்கமைவானதாக உள்ளது. மொபைல் கட்டமைப்புகளில் நிதிச் சேவைகளை அதிகளவு பெற்றுக்கொள்ளக்கூடிய இலங்கையின் டிஜிட்டல் வங்கியியல் புரட்சியுடன் ஒன்றித்ததாக இந்தச் சேவை அமைந்துள்ளது. WhatsApp அடிப்படையிலான முதலீட்டுக் கட்டமைப்பினூடாக, நிதித்தொழினுட்ப புத்தாக்கங்கள் எவ்வாறு முதலீட்டு செயன்முறைகளை ஒழுங்கமைக்க முடியும் மற்றும் நிதிசார் உள்ளடக்கத்தை மேம்படுத்தமுடியும் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய ICT விருதுகள் வழங்கலில் தங்க விருது வழங்கப்பட்டிருந்ததனூடாக, டிஜிட்டல் நிதிச்சேவைகளின் எல்லையை நோக்கிச் செல்வதில் அதன் பங்களிப்பை மேலும் வெளிப்படுத்தியிருந்தது.



**4. அனுபவமுள்ள மற்றும் முதல் தடவை முதலீடு செய்வோருக்கு First Capital Holding PLC'இன் WhatsApp அடிப்படையிலான சேவை நிதிசார் அணுகலை எவ்வாறு மேம்படுத்தும்?**

முதல் தடவை முதலீடு செய்வோருக்கு, அவர்களுக்கு பரிட்சியமான கட்டமைப்பினூடாக குறைந்த தடைகளைக் கொண்ட பிரவேசத்தை இந்தச் சேவை வழங்குகிறது. முதலீட்டு கட்டமைப்புகளுடன் பாரம்பரியமான இணைந்த சிக்கல் தன்மையை இது இல்லாமல் செய்துள்ளது. அனுபவம் வாய்ந்த முதலீட்டாளர்களுக்கு, இந்தக் கட்டமைப்பினூடாக, துரிதமாக, தமது பிரிவுகளை முகாமைத்துவம் செய்துகொள்ளவும், ஒன்றுக்கு மேற்பட்ட சாதனங்கள் அல்லது loginகளை பயன்படுத்தாமல், துரிதமாக அவற்றை அணுகுவதை உறுதிசெய்கின்றது. இந்த புதிய WhatsAppஅடிப்படையிலான தீர்வினூடாக இரு தரப்பினருக்கும் ஒப்பற்ற அனுபவம் சேர்க்கப்படுகின்றது.

**5. இலங்கையின் முதலீட்டுக் கட்டமைப்பில் மும்மொழி ஆதரவின் அறிமுகம் எவ்வாறு பயனுள்ளதாக அமைந்திருக்கும்?**

தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சேவைகளை வழங்குவதனூடாக, நிதிசார் வலுவூட்டலில் மொழி என்பது ஒரு தடங்கல் இல்லை என்பதை First Capital Holdings PLC உறுதி செய்கிறது. அணுகலில் நீண்டகாலமாகக் காணப்பட்ட இடைவெளியை இது இல்லாமல் செய்து, எந்த மொழியைச் சேர்ந்தவராக இருந்தாலும் பல இலங்கையர்களுக்கு தமது நிதிசார் எதிர்காலங்களை நம்பிக்கையுடன் கட்டுப்படுத்திக் கொள்வதற்கான வசதியை வழங்குவதாக அமைந்துள்ளது.

**6. WhatsAppஅடிப்படையிலான பரிவர்த்தனைகளில் வாடிக்கையாளர் நம்பிக்கையை உறுதிசெய்வதற்கு எவ்வாறான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?**

இந்தச் சேவையை வடிவமைக்கும் போது பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது. login மற்றும் உறுதிப்படுத்தல் நிலைகளின் போது OTPஅடிப்படையிலான உறுதிப்படுத்தல் போன்றன முன்னெடுக்கப்பட்ட சில பிரதான ஏற்பாடுகளாக அமைந்திருந்தன. அவற்றினூடாக, உறுதி செய்யப்பட்ட பாவனையாளர்கள் மாத்திரம் தமது கணக்குகளை அணுகுவதை உறுதி செய்யமுடியும். சகல தொடர்பாடல்களும் endtoend encryption ஊடாக பாதுகாக்கப்படுவதுடன், அதனூடாக வாடிக்கையாளர் தரவுகள் மற்றும் பரிவர்த்தனை விபரங்கள் பாதுகாக்கப்படுகிறது. மேலும், மின்னஞ்சல் மற்றும் SMS ஊடாக உறுதிப்படுத்தல் அனுப்பப்பட்டு, வெளிப்படைத்தன்மை மற்றும் அசல்நேர கண்காணிப்பை உறுதி செய்கிறது. கடுமையான சைபர் (Cyber) பாதுகாப்பு ஒழுங்குபடுத்தலுக்கமைவானதாக இந்தச் செயன்முறைகள் அமைந்திருப்பதுடன், கட்டமைப்பில் வாடிக்கையாளரின் நம்பிக்கையை உறுதிசெய்வதாகவும் அமைந்துள்ளது.

**7. WhatsAppஅடிப்படையிலான முதலீட்டுத் தீர்வுகள் இலங்கையில் நம்பிக்கை அலகுகள் மீதான முதலீடுகளில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

முதலீட்டை அதிகளவு அணுகச்செய்வது மற்றும் நிர்வகிப்பை இலகுவாக்குவதனூடாக WhatsApp அடிப்படையிலான தீர்வுகள், பெருமளவு பின்பற்றல் வீதங்களை ஏற்படுத்தும் என நாம் எதிர்பார்க்கிறோம். குறிப்பாக, இளம் நிபுணர்கள் மற்றும் டிஜிட்டல் ஆற்றல்மிக்க பாவனையாளர்கள் மத்தியில் இதனை அவதானிக்கமுடியும். எளிமையாக்கம் மற்றும் பயன்படுத்த இலகுத்தன்மை போன்றன, நம்பிக்கை அலகு முதலீடுகளில் பங்கேற்பை அதிகரிக்கச் செய்து, துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும்.

**8. எதிர்காலத்தில் இந்த முறைமை இதர நிதித் தீர்வுகள் அல்லது சேவைகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படலாமா?**

கண்டிப்பாக, WhatsApp அடிப்படையிலான முறை என்பது, பல நிதித் தீர்வுகள் மற்றும் சேவைகளில் எதிர்காலத்தில் விரிவாக்கமடைவதற்கு உறுதியான வாய்ப்பைக் கொண்டுள்ளது. திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் முதலீடுகள் செயற்பாட்டை இந்தக் கட்டமைப்பில் முன்னெடுப்பதை First Capital Holding PLC ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. எதிர்காலத்தில், AI வலுவூட்டப்பட்ட chatbots களை ஒன்றிணைக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அதனூடாக, WhatsApp இல் பரந்தளவு சேவைகளை அணுகுவது விரிவாக்கப்படும். வாடிக்கையாளர்களுக்கு பரிபூரண டிஜிட்டல் சூழல்கட்டமைப்பை ஏற்படுத்திக் கொடுப்பது நோக்காக அமைந்திருப்பதுடன், முதலீட்டுத் தீர்மானங்கள் முதல் இலாகா முகாமைத்துவம் வரை சகல செயற்பாடுகளையும் சீரமைப்பது எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

**9. டிஜிட்டல் நிதிச்சேவைகளில் சர்வதேச போக்குகளுடன் ஒப்பிடுகையில் First Capital Holding PLC இன் புத்தாக்கம் எவ்வாறானதாக அமைந்துள்ளது?**

First Capital Holding PLC' இன் WhatsApp முதலீட்டுச் சேவை என்பது, conversational banking, embedded finance மற்றும் Aldriven personalisation போன்ற சர்வதேச போக்குகளுடன் ஒன்றித்ததாக அமைந்துள்ளது. அதுபோன்ற புத்தாக்கங்கள் உலகளாவிய ரீதியில் காணப்படும் JP Morgan, Citibank, மற்றும் DBS போன்ற நிறுவனங்கள் அடங்கலாக பல நிறுவனங்களால் பின்பற்றப்படுகின்றது. அதனூடாக, அதிகளவு உள்ளுணர்வு, appஒன்றிணைப்பு சேவைகளை நோக்கிய நகர்வை வெளிப்படுத்துகின்றன. வாடிக்கையாளர்கள் தினசரி பயன்படுத்தும் கட்டமைப்பினூடாக பரிவர்த்தனைகளை மேற்கொள்ளச் செய்வதனூடாக, நிதிச்சேவைகளில் சர்வதேச டிஜிட்டல் மாற்றங்களுக்கு First Capital பங்களிப்பு வழங்கிய வண்ணமுள்ளது.

**10. இலங்கையில் டிஜிட்டல் நிதிசார் பரிவர்த்தனைகளின் எதிர்காலத்தில் AI மற்றும் automation ஆகியன எவ்வாறான பங்கைக் கொண்டிருக்கும்?**

AI மற்றும் automation ஆகியன இலங்கையின் எதிர்கால டிஜிட்டல் நிதிச் சேவைகளை மாற்றியமைப்பதில் மிகவும் முக்கியத்துவம் பெறும். பொருத்தமான முதலீட்டு ஆலோசனைகளை வழங்கல், KYC உறுதிப்படுத்தல் போன்ற automate செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் chatbots ஊடாக வாடிக்கையாளர் ஆதரவை மேம்படுத்தல் போன்றவற்றினூடாக பிரத்தியேகமயமாக்கலை அவை முன்னெடுக்கும். AI இனால் behavioural analytics ஐ பயன்படுத்தி உயர் மோசடி இனங் காணல்களையும் மேற்கொள்ளமுடியும். இந்த ஆற்றல்களினூடாக, மிருதுவான, பாதுகாப்பான மற்றும் அதிகளவு மதிநுட்பமான நிதிசார் பரிவர்த்தனைகளை டிஜிட்டல் கட்டமைப்புகளில் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

**11. நிதிச்சேவைகளை வழங்கும் நிறுவனங்கள், வாடிக்கையாளர் ஈடுபாட்டை மேம்படுத்த WhatsApp போன்ற புகழ்பெற்ற தகவல் பரிமாற்றக் கட்டமைப்புகளை எவ்வாறு பயன்படுத்தலாம்?**

வங்கிகள் மற்றும் நிதிச்சேவைகளை வழங்கும் நிறுவனங்கள், WhatsApp போன்ற தகவல் பரிமாற்ற கட்டமைப்புகளைப் பயன்படுத்தி, அசல்நேர, பிரத்தியேகமான வாடிக்கையாளர் ஆதரவை Aldriven bots ஊடாக வழங்கமுடியும். அதனூடாக, கணக்கு தகவல் மற்றும் முன்னைய பரிவர்த்தனை விபரங்கள் போன்றவற்றை உடனுக்குடன் அணுக அனுமதியளிப்பதுடன், கடன் விண்ணப்பங்கள் அல்லது நிதிப்பரிமாற்றங்களை ஒழுங்கமைக்கும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். பாவனையாளர்களுக்கு குறைந்த முயற்சியில், தமது நிதிகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காக, உரிய நேரத்தில் நிதிசார் தகவல்கள் மற்றும் நினைவூட்டல்களை வழங்க இந்தக் கட்டமைப்புகள் பயனுள்ளதாக அமைந்திருக்கும்.

**12. டிஜிட்டல் புத்தாக்கம் தொடர்பில் First Capital Holdings PLC'இன் வழிமுறையினூடாக இதர நிதிச்சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் எவ்வாறான விடயங்களை கற்றுக் கொள்ள முடியும்?**

First Capital Holdings PLC'இன் பயணத்தினூடாக, இதர நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு பெறுமதிவாய்ந்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். இது வாடிக்கையாளர்கள் இருக்கும் இடத்திலும், அவர்கள் பழகிய மற்றும் நம்பும் தளங்களிலும் பயன்பாட்டின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. பயனர் வசதிக்கான கவனம், வலுவான பாதுகாப்பு மற்றும் பன்மொழி அணுகுமுறையுடன் இணைந்து, உள்ளடக்கிய மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்தப்பட்ட சேவை வழங்கலுக்கான தெளிவான அளவுகோலை அமைக்கிறது. மேலும், AI மற்றும் automation ஆகியவற்றை முன்கூட்டியே ஏற்றுக்கொள்வது, தொழினுட்பம் எவ்வாறு சாதனங்களை திறமையாக அளவிடமுடியும் என்பதை தெளிவாக நிரூபிப்பதுடன், வாடிக்கையாளர் அனுபவத்தையும் மேம்படுத்துகிறது.

இலங்கையின் டிஜிட்டல் நிதிச் சேவைகளில் நம்பிக்கை அலகு மற்றும் அரசாங்க பிணையங்கள் WhatsApp மும்மொழித் திட்டம் புதிய நியமத்தை ஏற்படுத்தியுள்ளது. முதலீட்டை எளிமைப்படுத்துவது மாத்திரமன்றி, நிதிசார் வலுவூட்டலுக்கு தொழினுட்பத்தை பயன்படுத்துவதில் First Capital'இன் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியுள்ளது. டிஜிட்டல் மாற்றியமைப்பு தொடரும் நிலையில், இதுபோன்ற புத்தாக்கங்கள், முதலீடுகளின் எதிர்காலத்தில் முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைந்திருக்கும். டிஜிட்டல் சிறப்பை முன்னெடுத்தல், வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்தல் மற்றும் அனுபவம் வாய்ந்த அல்லது புதிய முதலீட்டாளர்களுக்கு தமது நிதிப்பிரிவுகளை தம் ஸ்மார்ட் போன்களினூடாக நிர்வகிப்பதை உறுதி செய்வதில் First Capital Holdings PLC தொடர்ந்தும் தன்னை அர்ப்பணித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வதேச ரோல் போல் உலகக்கிண்ணம் பங்கேற்ற மன்னார் வீரர்கள் கௌரவிப்பு!

மன்னார், ஜுலை 8
2025ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண இளையவர் போட்டி மற்றும் பெரியோருக்கான ஆசியன் ரோல் போல் அணியில் மன்னார் மாவட்டம் சார்பாக இலங்கை அணிக்குத் தெரிவாகி சர்வதேச ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வீர, வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. கடந்த மாதம் 23ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை கென்யா நைரோபியில் இந்தப் போட்டி இடம்பெற்றது. இதில் இலங்கை அணியில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 3 யுவதிகளும் 4 இளைஞர்களும் தெரிவாகிக் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-41-56.213)




# குருபூஜை தினமும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜுலை 8
கீரிமலையில் சமாதிகொண்டு உறையும் ஈழத்துச் சித்தர் அருளம்பலசுவாமிகளின் 100ஆவது குரு பூஜை தினத்தை முன்னிட்டு அருளம்பலம் சுவாமிகளின் சமாதியில் விசேட பூஜை வழிபாடுகள் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன. இதன் பொழுது அருளம்பலம் சுவாமிகளின் நூல் வெளியீடும், சுவாமிகளின் நினைவுப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களிற்கான பரிசில் வழங்கல் நிகழ்வும், 100ஆவது ஆண்டைக் குறிக்கும் முகமாக 100 மரக்கன்றுகள் சித்தர் பீடத்தில் நடுகை செய்யும் நிகழ்வும் இடம்பெற்றன. நூலின் முதற்பிரதியை சிவகுரு ஆதீனத்தின் குருமுதல்வர் வேலன் சுவாமிகள் வெளியிட பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா பெற்றுக்கொண்டார். (ச-41-125)



# கௌரவிப்பு

கொடிகாமம், ஜுலை 8
கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்விவலய தமிழ்ப்பாடப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளருமான ப.பரணிதரன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்விவலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ்.சிவதாசன், பழையமாணவன் சு.வினோதன், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-159)




வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் ஆனி உத்தர உற்சவம் கடந்த புதன்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. காலை 10.30 மணியளவில் அபிஷேகம், சிறப்புப் பூஜையும் மாலை 4.30மணியளவில் அபிஷேகமும் வழிபாடுகளும் மாலை 5மணியளவில் வசந்தமண்டபப் பூஜையும் இடம்பெற்றன. தொடர்ந்து நடராஜர் திருநடனக் காட்சியும் இடம்பெற்றது. (ச-41-66)




# கலாசாலையில் ஒன்றுகூடல்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விசேட கல்வி ஆசிரிய மாணவர்கள் முன்னெடுத்த ஒன்றுகூடல் நிகழ்வு கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலக்ஷ்மி மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சமுதாய மற்றும் குடும்பநல மருத்துவத்துறைத் தலைவர் மருத்துவர் சுபாஸ்சந்திரன் குமரன் அதிதிப் பேச்சாளராகக் கலந்துகொண்டு சிறப்புரையையும் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் லதாங்கி அம்பிகைபாகன் கலந்துகொண்டு வாழ்த்துரையையும் நிகழ்த்தினர். கலாசாலையின் விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி சாஜகான் பாத்திமா நுஸ்லா கலந்துகொண்டு "விசேட கல்வியின் தற்போதைய செந்நெறிகள்" எனும் பொருளில் உரையாற்றினார். (ச-41-166)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி அபிராமி அசுபதிராஜ்**



**திரு விஜயகாந்தன் ஜனகன்**

எமது கல்லூரியில் ஆசிரியர்களாக கடமையாற்றி தற்போது வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளர்களாக பதவியுயர்வு பெற்றுள்ள எமது ஆசிரியர்களை கல்லூரிச் சமூகம் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நட்புறவுக் கழகம்
யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)

(CS 58796) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மரபுரிமைச் சின்னம்; தகுதியை இழக்குமா சிகிரியா?

கொழும்பு, ஜூலை 8

**உலகப் பாரம்பரிய சின் படும் அபாயம் எழுர் கள் அமைச்சர் பேராசிரியர் களிலிருந்து சிகிரியா மற்றும் காலிக் கோட்டை அகற்றப் ளது என்று புத்தசாசன மற்றும் சமய கலாசார அலுவல் ரிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.**

1911ஆம் ஆண்டு காலிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ், சீன மற்றும் பாரசீக மும்மொழிகளிலான கல்வெட்டு மற்றும் பாணந்துறை விவாதம் தொடர்பான விசேட எழுத்துமூல ஆவணங்களும் அண்மையில் யுனெஸ்கோ அமைப்பால் உலகப் பாரம்பரிய சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதே வேளை சிகிரியா மற்றும் காலிக் ாட்டை ஆகியவற்றை அண்டிய ததிகளில் அதிகரித்துவரும் கட்டடங்களால் அவை உலகப் பாரம்பரிய சின்னங்களிலி ருந்து அகற்றப்படும் அபாயம் எழுந்துள்ளது. முறையற்ற விதத்தில் கட்டடங்களைக் கட்டுவதற்குக் கடந்த காலங்களில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க தளமான சிகிரியா, இன்றுவரை இலங்கையின் அதிசயங்களை உலகின் றது. எனினும் தற்போது சிகிரியாவைச் சுற்றி சுமார் 124 கட்டடங்கள் எழுந்து அதன் பாரம்பரியத்தை மழுங்கடித்துள்ளன. இந்தநிலையில் சிகிரியாவை அண்டிய பகுதிகளில் வசித்துவருபவர்களை அகற்றுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# மனப்பான்மை ரீதியான மாற்றமே ஊழல் மோசடிகளை ஒழிக்கும்!

## ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

தண்டனைகளால் மட்டும் ஊழலைக் கட்டுப்படுத்தமுடியாது. மனப்பான்மை ரீதியான மாற்றமே ஊழல் மோசடிகளை முற்றாகக் கட்டுப்படுத்தும் என்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமுமான ரங்க திசாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- அண்மைய நாள்களாக நாட்டில் ஊழல், மோசடி ஊறிப்போயுள்ளது. குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்து தண்டனை பெற்றுக்கொடுப்பதன் ஊடாக மாத்திரம் ஊழலை நிறுத்த முடியாது. முதலில் மனப்பான்மை ரீதியான மாற்றம் ஏற்படவேண்டும். தமக்கு உரிமை இல்லாத ஒன்றை வழங்கும்போது அதனை நிராகரிக்கும் சமூகத்தை உருவாக்கவேண்டும். அரச அதிகாரிகள் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுச் செயற்படவேண்டும். அரசியல்வாதிகள் கூறும் தவறான தீர்மானங்களை நிறைவேற்றாத அரச சேவைக் கட்டமைப்பை உருவாக்கவேண்டும். ஊழல் மோசடி காரணமாக எமது நாட்டுக்கு என்ன நடந்தது என்பதை நாம் அறிவோம். நாட்டு மக்கள் ஊழல், மோசடியைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று கோருகின்றனர்.

வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களா இங்கு ஊழலிலும் மோசடியிலும் ஈடுபடுகின்றனர்? ஊழல்வாதிகளைக் கைதுசெய்யுங்கள் எனும் கூட்டத்துக்குள்ளேயே ஊழல்வாதிகள் இருக்கிறார்கள். அரசியல்வாதிகள் கூறும் தவறான தீர்மானங்களை நிறைவேற்றாத அரசசேவைக் கட்டமைப்பை உருவாக்கவேண்டும். இதற்கு முன்னர் இவ்வாறான கட்டமைப்புகள் உருவாக்கப்படவில்லை - என்றார். (ம-இ)



# கேரளக் கஞ்சா மீட்பு

மன்னார், ஜூலை 8

மன்னாரில் 20 மில்லியன் ரூபா பெறுமதியுள்ள கேரளக் கஞ்சா நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளது. இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டு நடுக்குடாக் கடற்கரைக்கு அருகில் உள்ள 30ஆவது காற்றாலைக் கோபுரத்துக்கு அருகில் உள்ள காட்டுப் பகுதியில் கஞ்சாப் பொதிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (எ-213)


# மரண அறிவித்தல்

## இளையதம்பி சிவலிங்கம்
### (பிரபல ஜோதிடர்)



வேலணை கிழக்கு 3ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், நல்லூர் முருகேசர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சிவலிங்கம் அவர்கள் நேற்று (07.07.2025) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி-செல்லம்மா தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா-தையலம்மா தம்பதியின் அன்பு மருமகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், வதனி, ஜெயந்தன், ஜீவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் இராசமலர், நேசமலர், காலஞ்சென்ற புஸ்பமலர் மற்றும் யோகேஸ்வரி அவர்களின் அன்புச் சகோதரரும், இரத்தினசிங்கம், காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் வன்னியசிங்கம், பாலசிங்கம், கமலாதேவி, குலமணிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2025) புதன்கிழமை காலை 07.00 மணியளவில் இல.49 முருகேசர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 09.30 மணியளவில் வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 16.11.1948
மறைவு 07.07.2025

இல.49
முருகேசர் வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்
077 844 8456


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை ஆட்கள் தேவை

K.K.S வீதி கோண்டாவிலில் உள்ள உணவகம் ஒன்றிட்கு உணவகம் சம்பந்தப்பட்ட அனைத்து வேலைக்கும் ஆண், பெண் இருபாலாரும் தேவை.
வயது 20 - 55 வரை

தொடர்பு:- 077 811 2561

## The Royal College of Jaffna

தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
ஆண்டு 10, O/L, A/L கலைப்பிரிவு மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெறுகின்றன. சிறுகுழுக்களாக அனுபவம் மிக்க ஆசிரியர்கள் மூலம் வகுப்புகள்.

பிரான்பற்று வீதி, சங்கானை
தொடர்பு: 077 675 1649

# மரண அறிவித்தல்

## செல்வரத்தினம் சண்முகராசா

**(ஓய்வு பெற்ற நிதி உதவியாளர்-கோப்பாய் பிரதேச செயலகம்)**



ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சண்முகராசா அவர்கள் கடந்த (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம்-பவானியம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் சோதிராணி (ஓய்வு பெற்ற லிகிதர் ப.நோ.கூ.ச-அச்சுவேலி) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் ஸ்ரீஸ்கந்தராசா, காலஞ்சென்றவர்களான சரோஜினிதேவி, குகநாதன், சகுந்தலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கவிதா (லண்டன்), முகுந்தன் (அதிபர் யா/கதிரியப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலை), நிசாந்தன் (கேபிள் TV) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரபாகரன் (லண்டன்), குபேரினி (ஆசிரியை-யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்),ஆகியோரின் மாமனாரும் கார்த்திகா (லண்டன்), தர்சனன் (லண்டன்), சத்விகா, ஆராதனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் பத்தமேனியிலுள்ள தீர்தாங்குள இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு:
077 371 5949
077 314 4574

தகவல்:
குடும்பத்தினர்

# தங்கம்மா அப்பாக்குட்டியின் 17ஆவது ஆண்டு குருபூசை

யாழ்ப்பாணம், ஜூலை 8

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய முன்னாள் பெருந்தலைவர் சிவத் தமிழ்செல்வி கலாநிதி தங்கம்மா அப் பாக்குட்டியின் பதினேழாவது ஆண்டு குருபூசை நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆலய அன்னபூ ரணி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ் வில் யாழ்.பல்கலைக்கழக இலத்திரனி யல், பௌதீகத்துறைப் பேராசிரியர் முருகதாஸ் தணிகைச்செல்வன் பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்க ழக மருத்துவபீட உடலியங்கியல்துறை விரிவுரையாளர் மருத்துவர் பேரானந்த ராஜா டினேசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். நிகழ்வில் இணு வில் சிவகாமி அம்மன் கோவில் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சாம்பசிவசோமச பேசக் குருக்கள், இணுவில் கந்தசுவாமி கோவில் வேதாகம உபாத்தியர் சிவஸ்ரீ. சேதுசிவபால சர்மா, துர்க்காபுரம் தோதரை அம்மன் ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ.கிருஸ்ணகணேசமூர்த்தி சர்மா ஆகிய மூன்று மூத்த சிவாச்சாரியார்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

(ஏ- 41-66)

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணையவழி சேவை நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 8

தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து இணையவழிச் சேவைகளும் மறு அறிவித் தல் வரும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அத்தியாவசிய பராமரிப்புப் பணிகள் காரண மாக நேற்று முதல் சேவைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் தகவல் சரிபார்ப்புகள், ஒன்லைன் பதிவு, வாக்காளர் அறிவிப்புக ளைப் பெறுதல் மற்றும் பிற மாவட்டங்கள் தொடர்பான தகவல்களைப் பிரித்தெடுத்தல் உள்ளிட்ட அனைத்து இணையவழிச் சேவை களும் மறு அறிவித்தல் வரும் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளன.

(ஏ-இ)



சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் ஆரம் பிக்கப்பட்டு 30 வருடங்கள் நிறைவை முன் னிட்டு உடுவில் பிரதேச செயலாளர் பா.ஜெய கரனின் வழிகாட்டுதலில் ஏழாலை தெற்கில் அமைந்துள்ள முன்பள்ளி மற்றும் கல்வி நிலையத்தில் சிரமதான நிகழ்வு கடந்த புதன் கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் ஜே203 ஏழாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி சிறுவர் கழக அங்கத்தவர்கள் ஆகி யோர் கலந்துகொண்டனர். (ச-41-66)

# மரண அறிவித்தல்



## இராசரத்தினம் குணசீலன்

சில்லாலை, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் குணசீலன் அவர்கள் கடந்த (03.07.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இராசரத்தினம் - ஜெகசோதி தம்பதியரின் அன்பு மகனும், கனகரத்தினம் - காலஞ்சென்ற கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், துவாரகாவின் (ஆச்சி) பாசமிகு கணவரும், ஆரபி, சபரீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாபரன், காண்டீபன், கருணாகரன், தர்ஷன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுபானி, நிலுஜா, விதுஷா, சுதாஜினி, செந்தூரன், திருமாலினி, சோபிகா ஆகியோரின் மைத்துனரும், மிதிலா, சத்தியநாதன், நம்சன் ஆகியோரின் சகலனும், துர்க்கா, அக்ஷயன், ஆஜீஸ், சாஜீஸ், கபிஸ், ஹரிஸ், ஹரினி, ஹாசினி, ஆதிரன் ஆகியோரின் சிறிய தந்தையும், ஆருஷன், ஹாசினி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு.

(CR/45460) J-1

தகவல்: குடும்பத்தினர்
077 1130048

# கண்ணீர் அஞ்சலி



## கோணஷ்ராஜா செந்தாமரைசெல்வி (கஸ்தூரி)

யாழ் நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும், நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கோணேஷ்ராஜா செந்தாமரைசெல்வி அவர்கள் கடந்த (01.07.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராசா மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னு-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், கோணேஷ்ராஜா அவர்களின் அன்பு மனைவியும், அர்ச்சயன், ஆரதி ஆகியோரின் அன்புத் தாயாரும், டாரியோவின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இதயசெல்வி மற்றும் தமிழ்செல்வி, பகீரதன், சுரேகா, அனித்தா, கஜானி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2025) புதன்கிழமை முற்பகல் 09.00am- நண்பகல் 12.00pm மணி வரை Helsfyr Gravlund Norway இல் நிகழும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிரசன்னா (சகோதரர்)
பரமேஸ்வரி (தாயார்)
077 665 5938
076 343 5763

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

இந்தப்புதைகுழியில் இரு தினங்களுக்கு முன்னர், ஒரு மனிதச் சிதிலம் அடையாளம் காணப்பட்டிருந்தது. நேற்று மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான அகழ்வுப் பணிகளின்போதே அங்கு பிறிதொரு சிதிலமும், வேறு சில சிதிலங்கள் குவியல்களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றின் மீதான மேலதிக பணிகள் இன்று தொடரவுள்ளன.

நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல், சட்டத்தரணி ஞா.ரணித்தா, சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## குற்றப்...

மாகவே இதைக் கருதவேண்டும் இவ்வாறு சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தெரிவித்தார்.

செம்மணிப் புதைகுழி தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணிப் புதைகுழியில் நேற்றையதினம் 12ஆம் நாள் அகழ்வுப்பணி இடம்பெற்றிருந்தது. மேலும் புதிய பகுதிகளிலும் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. கண்டுபிடிக்கப்பட்ட என்புத் தொகுதிகள் நில மட்டத்திலிருந்து 2 அடி ஆழத்திலேயே புதைக்கப்படிருக்கிறன. இது சாதாரணமாக 'மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்ட' இடமாகத் தெரியவில்லை. மாறாக சடுதியாக புதைக்கப்பட்டது போல் காணப்படுகின்றது.

சிறுவர்களின் என்புத் தொகுதிகளும் காணப்படுகின்றன. இது மிகப்பெரும் சர்சையை தோற்றுவித்திருக்கிறது.

எனவே முகத்தோற்றத்தின் அளவில், நிச்சயமாக குற்றம் நடைபெற்ற இடமாகவே இந்தப் புதைகுழி காணப்படுகின்றது. இந்த விடயத்தில் மிகவும் அக்கறையுடன் ஆய்வாளர்கள் செயற்பட்டு வருகிறார்கள். தினமும் அவதானிக்கப்படும் விடயங்கள் உத்தியோகபூர்வமாக ஊடகங்களுக்கு அறிவிக்கப்படுகின்றன - என்றார். (அ-ம-26)

## முன்னாள்...

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருந்த, முன்னாள் போராளிகள் நலன்புரிச் சங்க வவுனியா மாவட்ட தலைவர் ஆனந்தவர்மன் எனும் அரவிந்தன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் 'பேஸ்புக்கில்' இடப்பட்ட பதிவொன்றுக்காக, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அரவிந்தன் கைது செய்யப்பட்டிருந்தார். தனது விடுதலைக்காக அவர் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டங்கள் நடத்திய போதிலும் தொடர்ச்சியாக சிறையிலேயே அடைக்கப்பட்டிருந்தார். இவ்வாறான பின்னணியிலேயே, சுமார் ஒரு வருடத்துக்குப் பின்னர் தற்போது அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ரட்ணவேல் மற்றும் சட்டத்தரணி ரணித்தா ஆகியோர் அரவிந்தனுக்காக முன்னிலையாகியதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தின் கடந்த அமர்வில் அரவிந்தனின் விடுதலைக்காகக் குரல்கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

## எதற்காக...

அமெரிக்காவின் தாளத்துக்கேற்ப செயற்பட்ட ஜே.ஆர்.ஜயவர்த்தனகூட 1988ஆம் ஆண்டு இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த விவரங்களை வெளியிட்டார். ஜே.ஆரின் மருமகனான ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். அந்த உடன்படிக்கைகூட பகிரங்கப்படுத்தப்பட்டது.

ஆனால் தேசிய மக்கள் சக்தியினர், இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இந்தியப் பிரதமர் இலங்கைவந்தபோது ஏழு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அந்த விடயங்கள் தொடர்பில் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. எதற்காக ஒப்பந்தங்கள் மறைக்கப்படுகின்றன? இலங்கைக்குப் பாதுகாப்பற்ற ஒப்பந்தங்களே இவ்வாறு கைச்சாத்திடப்பட்டுள்ளன. இலங்கைக்குத் தேவையான ஒப்பந்தமென்றால், அது வெளியிடப்பட்டிருக்கும். ஒளித்து வைக்கப்பட்டுள்ளதால் அதிலுள்ள விடயங்கள் ஆபத்தானவை - என்றார். (அ-ம-44)

## தேசியப்...

வித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் தேசியப் பாதுகாப்பு தற்போது வரலாறு காணாத அச்சுறுத்தலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. நீதிமன்றத்துக்குள் வைத்து துப்பாக்கிச் சூடுகள் இடம்பெறுகின்றன. பொலிஸார் முன்னிலையில் துப்பாக்கிச்சூடு நடத்தப்படுகின்றது. வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து படுகொலைகள் இடம்பெறுகின்றன. ஆனால், 'ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்களே உயிரிழக்கின்றனர்' எனக்கூறி இந்தப் படுகொலைகளை நியாயப்படுத்துவதற்கு அரசாங்கம் முற்படுகின்றது.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கே மக்கள் அரசாங்கத்தை தெரிவுசெய்கின்றனர். எனவே, கொலை செய்யப்படுபவர்கள் யாரென்பது முக்கியம் அல்ல. எதற்காக இவ்வாறு படுகொலைகள் இடம்பெறுகின்றன என்பதே பிரதானமான விடயம்.

எதிர்க் கருத்துகள் உடையவர்களைக் கட்டுப்படுத்த முடியாதபோது, அவர்களைப் படுகொலை செய்துவிடும் ஆட்சியை பாசிசவாத ஆட்சியென்றே அழைப்பார்கள். ஆதலால், இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் ஆட்சி தொடர்பில் எமக்குப் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், புலிகளின் காலத்தில்கூட இவ்வாறானசம்பவங்கள் இடம்பெறவில்லை - என்றார். (அ-ம-44)

## ஆனையிறவில்...

சென்றடிப்பரும், யாழ்ப்பாணம்நோக்கி வந்துகொண்டிருந்த ஹைஏஸ் ரக வாகனமுமே இவ்வாறு நேருக்குநேர் மோதியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹைஏஸ் வாகனத்தில் பயணித்தோரில் பலர் காயமடைந்தனர். அவர்களில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இருவர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

## வெடிவைத்தகல்...

துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா வடக்கு பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட வெடிவைத்தகல் கிராம அலுவலர் பிரிவில், திரிவைச்சகுளம் பகுதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பெரும்பான்மை இனத்தவர்களால் தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக்காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன், மகாவலி (எல்) வலயத்தின் கீழ் மிகப்பெரியளவு வனப்பகுதிகளும் பெரும்பான்மை இனத்தவர்களால் அழிக்கப்பட்டு ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. இந்தச் செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது.

இந்த விடயம் தொடர்பில் உரிய திணைக்களங்களுடன் கலந்துரையாடுவதுடன், நாடாளுமன்றத்திலும் இது தொடர்பில் கேள்வி எழுப்பப்படும் - என்றார். சம்பவம் இடம்பெற்ற பகுதிகளை, நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மொழியுரிமையை...

நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீதியமைச்சர் ஹர்ஷண மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாட்டில் மொழியுரிமையை ஏற்காதமையும், அதை மதிக்காமல் விட்டமையும் சிறிய தவறல்ல. இதை நாங்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. அதனால் மொழி உரிமைகள் தொடர்பாக சட்ட அங்கீகாரம் மட்டும் போதாது. ஏட்டில் உள்ள உரிமைகள் மக்களின் வாழ்க்கையில் யதார்த்தமாக மாறவேண்டும்.

மொழி என்பது ஒரு நபரின் அடையாளத்தின் இதயம். அது நினைவின் குரலும், மரியாதையின் தாளம். சிந்தனையின் கட்டமைப்பு. ஒருவருக்கு தனக்கு நெருக்கமான மொழியில் கருத்துத் தெரிவிக்க அல்லது கருத்துக்களைச் செவிமெடுக்கச் சந்தர்ப்பம் இல்லையென்றால், அந்தச் சமூகத்தில் மனிதாபிமானம் நிராகரிக்கப்படுகிறது என்றே அர்த்தம். அதனால்தான், கோஷங்கள் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது. மொழிக்கொள்கையை செயற்படுத்துவதன் மூலமே இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுகிறது.

எமது வரலாற்றில் மொழியுரிமைகள் புறக்கணிக்கப்பட்டமை இனங்களுக்கு இடையில் நம்பிக்கையின்மையையும், ஐக்கியமின்மையையும் ஏற்படுத்தியது. இறுதியில் ஆயுத மோதல்களுக்கும் காரணமாக அமைந்தது. இந்த படிப்பினையை சரியாக கற்றுக்கொள்ளாவிட்டால் கசப்பான வரலாறு மீண்டும் வருவது நிச்சயமாகும்.

சமத்துவம் இல்லாமல் நீடித்த அமைதி இருக்க முடியாது. அரசு தனது மக்களின் மொழியை மதிக்காவிட்டால் சமத்துவம் ஏற்படப்போவதில்லை. நாங்கள் அதனைப் புரிந்துகொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்திலிருந்து அனைத்து கிராம அலுவலர் பிரிவிலும் இரண்டு மொழிகளிலும் விண்ணப்பங்களை விநியோகிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம் - என்றார். (அ-ம-இ)

## மூன்று...

நேற்றையதினம் மனிதப் புதைகுழியைச்சூழவுள்ள பகுதியில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், மனிதப் புதைகுழியில் மழைநீர் தேங்கவிடாது வெளியேற்றுவதற்காக தற்காலிகமாகக் கால்வாய் ஒன்று அமைக்கப்பட்டது. அண்ணளவாக 20 மீற்றர் நீளமுள்ள கால்வாய் இவ்வாறு அமைக்கப்பட்ட நிலையில், அதற்குள் மூன்று வெவ்வேறு இடங்களில் மனிதச் சிதிலங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து கால்வாய் வெட்டும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன், இந்தப் பகுதியையும் இணைத்து அகழ்வுகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## செம்மணிப்...

இவற்றுடன் சேர்த்தால் செம்மணிப் புதைகுழியில் இதுவரை 52 சிதிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் பன்னிரெண்டாம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே, மேலும் ஐந்து சிதிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி, செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 52 மனிதச் சிதிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 47 சிதிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், ஆடைகள் உள்ளிட்ட சில சான்றுப் பொருள்களும் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரு. மரக்கறிச் சந்தை விவகாரம்

# நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கு நகரசபை நிர்வாகம் நடவடிக்கை

நீண்டகாலமாக இழுபறிநிலையில் காணப்பட்டுவரும் பருத்தித்துறை மரக்கறிச் சந்தை விவகாரத்துக்கு நிரந்தரத் தீர்வுகாணுவதற்கு மரக்கறி வியாபாரிகளது கோரிக்கைக்கு அமைவாக மரக்கறிச் சந்தையை அமைப்பது தொடர்பில் பருத்தித்துறை நகரசபையின் புதிய தலைவர் டக்ளஸ் போல் நடவடிக்கை முன்னெடுத்துள்ளார்.

கடந்த நகராட்சிமன்ற ஆட்சிக்காலத்தில் பருத்தித்துறை நகரின் மத்தியில் அமைக்கப்பட்ட கட்டடத்தொகுதி யில் மரக்கறி வியாபாரிகளுக்கு ஏதுவான வசதிகள் செய்துகொடுக்கப்படாததுடன் மேல் தளத்தில் மரக்கறி வியாபாரம் செய்ய நிர்ப்பந்திக் கப்பட்டிருந்தனர்.

இதுதொடர்பில் வியாபாரிகள் தரப்பில் போராட்டங்கள், நீதிமன்ற வழக்குகள் எனத் தீர்வுக் காக முயற்சித்த நிலையிலும் பல்வேறு குறைபாடுகளுடன் மேல் தளத்திலேயே வியாபார நடவடிக்கையினைத் தொடர்ந்து வந்தனர். இந்தநிலையில் அண்மையில் மாற்று இடத்தில் புதிய கட்டடத்தொகுதி அமைத்து அங்கு மரக்கறிச் சந்தையை மாற்றுவதற்கு பருத்தித்துறை நகராட்சிமன்றச் செயலாளர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இந்தப் புதிய சந்தைத்தொகுதி தொடர்பிலும் வியாபாரிகளிடையே கடுமையான அதிருப்தி ஏற்பட்டதை அடுத்து நீதிமன்றத்தை நாடி வழக்குத் தொடுக்கப்பட்டு மரக்கறிச் சந்தை இடமாற்றத்துக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் புதிய மரக்கறி சந்தைத் தொகுதிக்கு முன்பாக உள்ள காணியை வாங்கி வாகனத் தரிப்பிடம் அமைப்பது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடுவதற்கு புதிய நகராட்சி மன்றம் தீர்மானித்தது.

அதனடிப்படையில், மரக்கறி வியாபாரிகள், பருத்தித்துறை வர்த்தகர்கள் சனசமூக நிலையப் பிரதிநிதிகள் உள்ளிட்டோருடன் புதிய நகர பிதா டக்ளஸ் போல் கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடினார். இதன்போது ஏற்கனவே மரக்கறிச்சந்தை நகரின் மத்தியில் இருந்து இடம்மாற்றப்பட்டதன் காரணமாக மரக்கறி வியாபாரிகள் சந்தித்துவரும் நெருக்கடிகள் தொடர்பில் வியாபாரிகள் எடுத்துரைத்தனர். இத்துடன் கீழ்த் தளத்திலேயே பொருத்தமானமுறையில் மரக்கறி வியாபார நடவடிக்கைளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதையடுத்து புதிய மரக்கறிச் சந்தைக்கு முன்பாக வாகனத் தரிப்பிடத்துக்குக் காணி கொள்முதல் செய்யும் நடவடிக்கையைக் கைவிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் மரக்கறி வியாபாரிகளின் கோரிக்கைக்கு அமைவாக மரக்கறிச் சந்தையை அமைப்பது தொடர்பில் சட்ட ஆலோசனைகள் பெற்றுக்கொள்வதுடன் அதுதொடர்பான களத்தரிசிப்பு மேற்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் மறு கலந்துரையாடலில் தீர்மானிப்பதா கவும் நகர பிதா டக்ளஸ் போல் தெரிவித்துள்ளார். (ச-100)

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

நல்லூர் பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு பெண் பணியாளர் தேவை.

சம்பளம் நேரில் பேசி தீர்மாணிக்கப்படும்.

தொடர்பு: 077 104 1923

**காணி விற்பனைக்கு**

கொடிகாமத்தில் சிக்னல் சந்தியில் இருந்து 1Km தூரத்தில் வீடு கட்டுவதற்கு உகந்த சுற்று மதிலுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

1 பரப்பின் விலை - 25 லட்சம்

தரகர்கள் தேவையில்லை

(CS 58795) E

தொடர்புகளுக்கு: 077 651 0244

**காணி விற்பனைக்கு**

நாவற்குழி அமிர்தா வீதி (சங்கன் சீமேந்து தொழிற்சாலைக்கு அருகில்) காணிகள் விற்பனைக்கு உண்டு.


தொடர்புகளுக்கு : 074 069 5110

## விபத்தில் முதியவர் காயம்

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லிபுரம் பகுதியில் நடந்த விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்த விபத்து நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது. வல்லிபுர ஆழ்வார் வீதியால் பயணித்த முதியவரை பட்டா ரக வாகனம் மோதியதால் விபத்து நடந்துள்ளது. புலோலி, வல்லிபுரக்குறிச்சியைச் சேர்ந்த 71 வயதான முதியவரே படுகாயமடைந்துள்ளார். அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிசிச்சைக் காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த விபத்துத் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள னர். (எ-100)

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
25 . 12 . 1944



மறைவு
01 . 07 . 2023

**அமரர் இராசதுரை அருளானந்தம்**

(திதி - ஆனி வளர்பிறை திரியோதசி)

அப்பா நீங்கள் கண்முன்னே நிலவாக வாழ்ந்தீர்கள்
ஆனால் எம்மை தவிக்கவிட்டுச்
செல்ல மனமில்லாமல் சென்றீர்கள் - அப்பா
அவை இன்றும் எம் மனக்கண்களில்
அழியாத கோலங்களாய் நிற்கின்றன.
உங்களின் ஆத்மா நல்ல ஆன்மா
என்று யாவர்க்கும் உணர்த்தினீர்கள் - அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்

"அன்னை இல்லம்"
பத்தானை வீதி
தாவடி தெற்கு, கொக்குவில்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

**2ம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
04 . 04 . 1949



மறைவு
16 . 06 . 2023

**அமரர் நடராசா வாமசிவன்**

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
எம்முடன் இருப்பீர்கள்

(CS 58785) E

குடும்பத்தினர்

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org